1984 மார்ச் 9]

(முற்பகல் 9.40.)

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் உப்பளப் பகுதியிலே 60,000 ஏக்கர் நிலம் உப்பு உற்பத்திக்குத் தகுதியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மேற்குக் கோடியில் இருக்கிற 5,000 ஏக்கர் நிலங்கள் தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதுவும் நல்ல உப்பாக இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, அதை விரிவுபடுத்தி, கிழக்குப் பகுதியிலே உப்பை உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்தால் நல்ல உப்பை உற்பத்தி செய்ய முடியும் என்று கருதப்படுவதால், அந்தக் கிழக்குப் பகுதியிலும் உப்பு உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆயப்பட்டு ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்தைச் சுற்றியும் தனியார் உப்பு உற்பத்தி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வேறு வசதிகள் செய்யப்படுகின்றனவா ? அங்கே சாலை வசதிகள் இல்லாததால் உப்பை எடுத்துச் செல்ல முடியாமல் இருக்கிறது. அதையும் உப்பு வாரியத்தின் மூலம்மேற் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு வாரியம், தனியார் உப்பளங் களிலே சாலை வசதி செய்து தர முடியாது. ஆனால் ஒட்டு மொத்தமாக உப்பளத் தொழில் மேம்பாட்டுக்கு என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது குறித்து அரசு ஆராயும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் கழிவுப் புகையால் பாதிக்கப்படும் விவசாய நிலங்கள்.

239—*வினா எண். 19599—திரு. சோ. அழகர்சாமி: மாண்பு மிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் கழிவுப் புகையால் அந்த ஆலையை அடுத்துள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் அதிகமான நஷ்டத்திற்குள்ளாகியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்த முறையில் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் மின்னியல் தூசி தடுப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் தூசிகள் தடுக்கப்பட்டு கழிவுப் புகையால் விவசாய நிலங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் கூட நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அந்தப் புகையின் காரணமாக அங்குள்ள சகல நிலங்களும் எந்த மகசூலும் செய்ய முடியாமல் நிலங்களிலே 2 அங்குலம் அந்தத் தூசி படிந்திருக்கிறது. வீடுகள் பூராவிலும் மேலே கூறைகளில் அந்த நிறமே மாறக் கூடிய அளவுக்கு வெள்ளையாக தூசி படிந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லும் போது தடுப்பு நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது சரியாக எடுக்கவில்லையே. இனிமேலாவது அந்தத் தூசியை தடுக்க நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காறும் அங்கு எலெக்டிரோஸ்டாடிக் பிரெசிபிடேட்டர் என்ற முறை நடை முறையில் இருந்த பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் அங்கு உழவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. அது அரசினுடைய கவனத்திற்கு வந்து அது நீக்கப்பட வேண்டுமென்ற முறையில்தான் தற்பொழுது அந்தப் பகுதியில் தூசி பரவாமல் தடுக்கும் உயரமான புகை மின்னியல் தூசி தடுப்பான்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவை பொருத்தப்பட்டு இந்தக் குறைபாடு தற்போது நீக்கப்பட்டிருக்கிறது. நிலத்தினுடைய தன்மை, ஏற்கனவே ஒரு வேளை பாதிக்கப்பட்டிருக்கலாம். Gradually that may get improv d என நான் கருதுகிறேன். அது குறித்து என்ன செய்ய வேண்டுமென்பதை அரசு மீண்டும் ஆராயும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள நிலங்கள் பாதிக்கப்பட்டதன் காரணமாக, விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாயிருக்கின்றனர். ஆகவே, அந்த ஆலையில் புதியவேலைக்கு ஆட்களைஎடுக்கும்போது பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால், அந்த

1984 மார்ச் 9]

ஆலையைக் கட்டும்போது நிலத்தை இழந்தவர்கள் குடும்பங்களி லிருந்து வேலைக்கு ஆட்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்களே, அந்த மாதிரி இந்தப் பாதிப்பை ஓரளவு குறைக்கும் வகையில், இந்தக் கோரிக்கையை ஏற்று, புதிதாக வேலைக்கு ஆட்களை எடுக்கும் போது, அந்தக் குடும்பங்களில் ஒவ்வொருவருக்கு வேலை கொடுக்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கழிவுப் புகையினால் தாக்கப்படுகிற பொழுது அத்தகைய தாக்குதல் நிரந்தரமான தாக்குதலாக இருக் கும் என கருதுவதற்கில்லை. தற்போது அந்தக் கழிவுப் புகை தாக்குதலிலிருந்து விடுபெற்றிருக்கிற காரணத்தால், நிலம் ஒரிஜி னல் தன்மை பெற்றுவிடும் எனக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பிரச்சினை குறித்து அந்தத் துறையோடு கலந்து ஆய்ந்து அந்த அடிப்படையில் முடிவு செய்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் ஆலை கழிவுப் புகையினாலே விவசாய நிலங்கள் பாதிக்கப்படாதபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மானாமதுரைக்கு அருகே அதைப் போல் ஒரு புதிய சிமெண்ட் ஆலை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதை அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். அதை மீறி உரிமதாரர்க ளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மைய அரசிற்கு பரிந்துரை செய்தும் பல நேரங்களில் சிமெண்ட் ஆலைகளுக்கு ஒன்றிற்கு கூட உரிமம் தருவதில்லை. அப்படி தப்பித்தவறி கிட்டிவிடுகிற போது அதை நாம் வரவேற்க வேண்டும்—தொழில் முன்னேற் றத்தின் அடிப்படையில். ஆனால் அதே நேரத்தில் சிமெண்ட் ஆலைகள் அமைக்கப்படுவதால் அந்தப் பகுதிகளில் இருக்கிற உழவர்களுக்கு விவசாயம் பாதிக்கப்படுமானால் அது நாம் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாத ஒன்று. மாண்புமிகு உறுப் பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு ஏற்று, மானாமதுரை மட்டுமல்லாமல் மற்றப் பகுதிகளிலும் இப்படி பாதிக்கப்பட்டிருந்தால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் சிமெண்ட் ஆலை ஆரம்பிப்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆலை அமைக்கக்கூடிய நேரத்திலே மின் தூசு துடைப்பான்களை முதலிலே அமைக்க வேண்டுமென்று கண்டிஷன் போர்ட்டு லைசென்ஸ் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்று சொல்லுகிறபோது ஏற்கெனவே இருக்கிற எலக்ட்ரிக் ஸ்டாட்டிக் பிரிசிபிட்டேட்டர் போன்றவைகள் எல்லாம் சரியானதாக இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்னியல் தூசு துடைப்பான்கள் சரியானவை என்று சொன்னார்கள். இதுகுறித்து தக்க நடவடிக்கையை எடுக்க அரசு முன்வரும்.

தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலம் சிமெண்ட் குழாய்கள், கிராதிகள் உற்பத்தி செய்யும் திட்டம்.

240— *வினா எண். 19768) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் குழாய்கள், கிராதிகள் உற்பத்திசெய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை. ஆனால், தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களைத் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் தயாராகிற சிமெண்ட் நல்ல தரமுள்ள சிமெண்ட் என்று முடிவு வந்திருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழக அரசாங்கம் கிராமப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும் மிகவும் முனைந்து தீவிரமாக காரியங்களை செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே அந்த சிமெண்ட்டை வைத்து குழாய்களைத் தயாரிக்கவும், கிராதிகளைத் தயாரிக்கவும் ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வாரியத்தினுடைய தேவைகளை ஈடேற்றுகிற நோக்கத்துடன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களை தயாரிப்பதற்காக கிட்டத்தட்ட